# SUPREME COURT OF INDIA



## Special Lok Adalat 2024

### 29.07.2024 - 03.08.2024

**The Supreme Court of India is organising a Special Lok Adalat week from 29 July to 3 August 2024. Advocates-on-record, Counsel and parties are requested to avail of the benefit of this mega settlement drive. Parties can appear both physically or virtually on the online platform to arrive at final settlements of their disputes.**

### BENEFITS OF SPECIAL LOK ADALAT

- Swift compromise and settlement of disputes
- Final and executable awards
- Cost-effective resolution of disputes
- Refund of Court fee

You can also contact your nearest
State / District / Taluka Legal Services Authority.

Information available at the website https://www.sci.gov.in/

### Contact Details

Room No. 127, Block B, First Floor, Additional Building Complex,
Supreme Court of India, New Delhi–110001

Phone: +91-11-23115656

email: special.lokadalat@sci.nic.in

இந்திய உச்ச நீதிமன்றம்

# சிறப்பு மக்கள் நீதிமன்றம் 2024
# 29.07.2024 – 03.08.2024



இந்திய உச்ச நீதிமன்றம் 2024 ஜீலை 29 முதல் ஆகஸ்ட் 3 வரை சிறப்பு மக்கள் நீதிமன்றம் மூலம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவயைில் உள்ள வழக்குகளை சமரச முறையில் தீர்வு காண சிறப்பு மக்கள் நீதிமன்றத்தை ஏற்பாடு செய்துள்ளது. அதில் வழக்குரைஞர்கள் மற்றும் வழக்காடிகள் இருதரப்பினரும் கலந்து கொண்டு தங்கள் வழக்குகளை சமரசமாக முடிக்க நேரிலோ அல்லது இணையதள வசதி மூலமாகவோ தீர்வு காணலாம்.

சிறப்பு மக்கள் நீதிமன்றத்தின் **(Special Lok Adalat)** சிறப்பம்சங்கள்:-

- ✶ வழக்கு பிரச்சனைகளுக்கு சமரச முறையில் விரைவாக தீர்வு காண
- ✶ இறுதி மற்றும் செயல்படுத்துவதற்கான உத்தரவுகள்
- ✶ குறைந்த செலவில் வழக்குகளுக்கு தீர்வு
- ✶ நீதிமன்ற முத்திரை கட்டணம் திரும்ப பெறுதல்

| |
|---|
| உங்கள் அருகில் உள்ள மாநிலம்/மாவட்டம்/தாலுகா சட்டப்பணிகள் ஆணைக்குழுவை தொடர்பு கொள்ளவும் |

கீழ்கண்ட இணையதளத்தில் தகவல்கள் கிடைக்கும்

**https://www.sci.gov.in/**

தொடர்புக்கு

**Room No.127, Block B, First Floor, Additional Building Complex,**
**Supreme Court of India, New Delhi – 110001**
**Phone:+91-11-23115656**

**email:special.lokadalat@sci.nic.in**

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாற்றுமுறை தீர்வு மைய கட்டிடம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், ஈரோடு

# சுற்றறிக்கை

மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கான "Special Lok Adalat" எனப்படும் சிறப்பு மக்கள் நீதிமன்றம் வரும் 29.07.2024 முதல் 03.08.2024 வரை மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கூடிய அடையாளம் காணப்பட்ட ஈரோடு மாவட்டம் சார்ந்த வழக்களின் விபரம் ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

எனவே, பொதுமக்கள் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றத்தில் நடைபெறும் சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அடையாளம் காணப்பட்ட தங்களது வழக்கினை சமரச முறையில் தீர்வு காணும் பொருட்டு, ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் சிறப்பு முன் அமர்வு வரும் 14.06.2024 முதல் நடைபெற உள்ளது. அந்த முன் அமர்வில் வழக்காடிகள் நேரிலோ அல்லது காணொலி வாயிலாக கலந்துகொண்டு தங்கள் வழக்குகளுக்கு தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் முன்பாக முடித்துக் கொள்ளும் வழக்குகளுக்கு மேல் முறையீடு கிடையாது. மேலும் இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் மூலம் முடித்துக் கொள்ளப்படும் வழக்குகளுக்கு செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் முழுமையாக திரும்பப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

எனவே, வழக்காடிகள் மற்றும் பொது மக்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது வழக்குகளுக்கு, விரைவாக சமரசமுறையில் தீர்வு காண முன்வருமாறு ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் குறித்து பொதுமக்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவினை நேரிலோ அல்லது dlsaerode1@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது **0424-2214282** என்ற தொலைபேசி வாயிலாகவோ அல்லது அருகாமையில் உள்ள வட்ட சட்டப்பணிகள் குழுவினை நேரில் அணுகியோ விபரங்கள் அறிந்து கொள்ளுமாறு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.